# ஞான தீபம்.

புத்தகம்—1. | 1892 ௵ கார்த்திகை மீ 1 உ. | இலக்கம்—4.

குருமார்களே! ஆலிம்களை மூன்று பிரிவாக்கி, மூன்றும் பிரிவிலுள்ள ஆலிம்களின் இலக்ஷணங்களைக்காட்டுதற்காக முஸ்லிம்நேசனில் வெளியான ஒருகடிதத்தை உதாரணமாயெடுத்துப்பேசினேன். அப்படிப்பட்டவர்களேயன்றி, நெரிமையுடைய உலமாக்கள் சகலரும நமது மார்க்கமொன்றே அக்கிலேற்றுக்கொள்ளத்தக்க மார்க்கமென்பதை யறிவார்கள் இங்லாந்தில் குயில்லியம் துரை இஸ்லாமானதும், புதுமைப்படத்தக்கவிதமாய் அவருடைய பிரசங்கத்தினால் இஸ்லாம் அந்ததேசத்திற் பரந்துவருவதும், நமதுமார்க்கம் புத்தி ஏற்றுக்கொள்ளத்தக்கதா யிருப்பதினாலேயே. நமது ஆலிம்கள் நமது மார்க்கத்தை யறிந்திருப்பதுபோல் மறு சமயங்களையும், இக்காலத்திலுள்ள கல்வி சாஸ்திரங்களையுந் தீர்க்கமாய்க்கற்று, பிரசங்கஞ் செய்வார்களேயானால், ஒவ்வொரு வருடத்திலும் ஆயிரக் கணக்கான காபிரீன்களை இஸ்லாமாக்கக்கூடும். அவர்கள் இந்த சமானின் நிலவரத்தைக் கவனிக்க வேண்டும் அதற்குத்தக்க இல்முகளைக் கற்கவேண்டும் இலங்கை முஸ்லிம்களில் பல பாஷைகளையுங் கற்றுக்கொள்ளும் தாகம் கிளம்பியிருப்பதைக் கவனிக்கவேண்டும். அந்தக் கல்விகளினா லுண்டாகக்கூடிய ஆபத்துகளை யறியவேண்டும். அவைகளை மாற்றுதற்கு நமது மார்க்கத்தின் உண்மையைப் பிரசங்கமாக்கவேண்டும் அவ்விஷயங்களில் முயற்சி எடுப்பவர்களுக்கு உதவியாயிருக்கவேண்டும். ஹசதென்கிற தீய பார்வையாய்ப் பாராமல் கிருபை யென்கிற பரிந்த பார்வையாய்ப் பார்க்கவேண்டும். அப்படி நடந்தால் நபிசல்லல்லாகு அலைகிவஸல்லமவர்களுடைய சொற்படிக்கு அவர்கள் நபிமார்களின் சுதந்தரர்களாயும், இலங்கும் நக்ஷத்திரங்களாயுமாயிருப்பார்கள்.

போதகர்களே! கடவுளா லிறக்கப்பட்ட உண்மையான வேதத்திற்கு இலக்ஷணமாவது, அதில் யாதொரு குறைவுகளில்லாதிருத்தல். சூதான் தேசத்திலுள்ளகாட்டுமனிதர்கள்முதல், வித்வசிரோமணிகளுக்கெல்லாம் அவரவர்கள் புத்தியின் தரத்துக்குத்தக்க அறிவுகளும் அமல்களும் அடங்கினதாகவும், எல்லா சமானுக்கு மிணங்கினதாகவு மிருத்தல் வேண்டும். அல்லாகுத்தாலா படைத்த படைப்புகளொவ்வொன்றையும் நோட்ட மிட்டால், அவைகளின் அ

[illegible]ங்களெல்லா மவைகளின் இயற்கைக்குந் தலத்துக்கும் இணக்கமான தன்மை, அவைகளுக் கின்ன குறைவிருக்கிறது, இவ்விதம் படைத்தால் நல்லதென்று ஒருவராலுஞ் சொல்லக் கூடாததும் பரிபூரண ஞான மமைந்திருப்பது தெரியவரும். அதுபோலவே அவரது விறக்கிய வேதமா யிருந்தால் அது குறைவுகளில்லாத நிரப்பமானதாயிருக்கும். இந்த லக்ஷணம் எந்த வேதத்திலிருக்கின்ற தென்பதை யாராய்வோம்.

நாஸ்திகவரையுங் குறவானையும், கிறிஸ்தவர்களின் வேதப்புத்தகத்தையுங் குறித்துப் பேசினேன். இப்பொழுது கிறிஸ்துவேதத்தையும், இந்துவேதத்தையும், எங்கள் வேதத்தையும் ஒப்பிட்டுக் காட்டப்போகிறேன்.

மிருகங்கள் முதலிய உயிர்ப்பிராணிகளுக்கு அவைகளின்ன மிருகம் அல்லது உயிர்ப்பிராணி என்று தெரியா. மனிதன் அக்கிலுடையவனா யிருப்பதால் அவனுக்குத்தான் மனிதனென்பது தெரியும். ஒரு மனிதனுக்கு அக்கிலுண்டாகிப் பராயமானபொழுது, முதலாவது அவன் தன்னையே யறியவேண்டும். நானென்று சொல்லுகிறேனே இது என்ன? இது என்கை, என் சரீரமென்று சொல்லுகிறதும், சரீரத்தின் உறுப்புகளைப் பிரயோகிக்கிறதும் நடத்துகிறதுமென்ன? இது காற்றா? புகையா? இது எப்படிப்பட்ட வஸ்து என்று விளங்கவேண்டும். ஆனால் நாங்களெந்தமட்டு யோசித்தாலும், நம்முடைய உள்ளமை நமக்கு விளங்கக்கூடாததாயிருக்கிறது. உலகத்தி லுள்ளவைகளை யாராய்கிறோம் வானலோகத்திலிருக்கிற சந்திரன், சூரியன், நக்ஷத்திரம் முதலியவைகளை அக்கிலைக்கொண்டளந்து கிட்டப்படுத்துகிறோம். ஆனால் அந்த அக்கிலின்னதென்று அறியக்கூடியதாயில்லை. ஆயிரக்கணக்கான புத்தகங்களை வாசித்தறிந்து கொள்கிறோம் நினைத்தபோது அவைகளெங்கள் கருத்துக்கு வருகின்றன. ஆனால் அவைகள் எங்குமறைந்திருக்கின்றன, எங்கு பதிந்திருக்கின்றன, எவ்விதம் தேள்வையான நேரத்திற்கு மனத்திற்கு வெளியாகின்றனவென்று எங்களுக்கு விளங்குகிறதில்லை. நமமையல்லாதவைகளை ஆராய்ந்தறியக்கூடிய தத்துவமிருந்தும் நம்முடைய நபுசை நமக்கு அறிய சக்தியில்லாதிருக்கிறோம். இதற்குக்காரணமென்ன? இதற்குக் காரணமாவது:—அல்லாகுத்தாலாவுடைய சொற்படி நாம் கீழ்மையிலு மதிகக்கீழ்மையாயிருப்பதே. நம்முடைய நபுசு தீய குணங்களிற் முழ்ந்து கல்பு இருளாயிருப்பதும் நாம் உலக ஆசைகளுக்கும், சரீர இச்சைகளுக்குங் கீழ்ப்பட்டு அடிமையாயிருப்பதுமே. ஆகையால் வேதமாவது:—முதலாவது கல்பைத் துப்பரவாக்கி, சற்குணம்கொள்ளுதற்குரிய சட்டங்களும், இரண்டாவது-நமது கல்பு துப்பரவாகி வருகையில் நம்மை நாமறிகிற விதங்களு மடங்கினதாயிருக்கும் நமது கல்பைத் துப்பரவாக்கி, நாம் சற்குணம்கொள்வதற்கு முதலாவது, நாம் அல்லாகுத்தாலா ஒருவனுண் டென்பதை ஈமான் கொள்ளுகிறதும், இரண்டாவது நம்முடைய நபுசைத் துப்பரவாக்குகிறதற்கு, அவனால் வெளியாக்கிய கட்டளைகளை யுறுதிகொண்டு அவைகளைச் செய்வதுமாயிருக்கும். இதைத்தான் அல்லாகுத்தாலா, மனிதரைக் கீழ்மையிலும் கீழ்மையானவாக

ளாக்கிறேமென்று சொல்லியபின் (இல்லல்லதீலா ஆமனூவ அமிலுஸ்ஸாலிஹாத்திபலஹும் அஜ்றுன் கைறுமம்னூன்) ஈமான்கொண்டு நன்னடக்கைகளைச் செய்தவர்களைத்தவிர, அவர்களுக்கோ! முடிவில்லாத பேறு கிடைக்குமென்று திருவுளம் பற்றியிருக்கிறான்.

நம்மை நாமறிந்தால் நமது நாயனை யறிவோமென்று, நாயகம் நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய உள்ளமையையும் நாம் என்ன தத்துவத்தைக் கொண்டு நிலைத்திருக்கிறோமென்பதையும் விளங்கிவரும்போது, அல்லாகுத்தாலாவின் மஃரிபா வென்கிற இல்முண்டாகும். அந்து நபுசை அல்லாகுத்தாலா வுடைய பிரகாரம் துய்தாக்குதற்கும் அவன் கட்டளைப்பிரகாரம் நடப்பதற்கும் சரீயத்தென்று சொல்லப்படும். நமது உள்ளமைகளையும், மறைவான இல்முகளையுமறிதற்கு மஉரிபாவென்று சொல்லப்படும், கிறிஸ்த்துப் போதகரே! நமது சரீயத்திற்கும் உங்கள் சரீயத்திற்கு முள்ள வித்தியாசங்களைப் பின்னாற்சொல்வேன். இப்பொழுது உங்களிடம் சரீயத் திருக்கின்றதென்று வைத்துக்கொண்டபோதைக்கும், உங்களுக்கு மஉரிபா இல்லையே. உங்களிற் கல்விமான்கள் பற்பல சாஸ்திரங்களிலுந் தேர்ச்சியடைந்தவர்களாயிருந்தாலும், றாகென்பதென்ன? அதிலுள்ளமை யென்னவென்று கேட்டால், அது மனிதனுடைய புத்திக்கு மட்டுப்படாது. அதைக்குறித்து ஒன்றுஞ்சொல்லக் கூடாதென்ற மறுமொழியைச் சொல்லிவிடுகிறார்கள். புத்தியைக்கொண்டு இவைகளை மட்டுப்படுத்தக்கூடாதது நிசந்தான். ஆனால் நம்முடைய வேதத்தில் அவைகளை யறியும் வழிகளைக் காட்டியிருப்பதுமன்றி, அந்த வழிகளிற்சென்ற குத்தாபுமார்களும், ஆரிபீன்களும் அவைகளைக் காட்டிக்கொடுக்கிறார்கள். கிறிஸ்துப்போதகரே! உங்களுடைய வேதத்தில் மஃரிபா இல்லாததாற் சொற்ப வருடங்களுக்கு முன், அமரிக்காவிலும் ஐரோப்பாவிலும் சில கல்விமான்கள் கிறிஸ்துவேதத்தைவிட்டும் நீங்கி, புத்தமதத்திலுள்ள ஞானங்களையும், இந்துக்களுடைய ஞானங்களையும், சூபிமார்களுடைய சித்தாபுகளையும் பார்வையிட்டு, அவைகளுள் சிலதைச் சேர்த்து தியோசோபி (Tocospohy) என்று பெயர் வைத்து, ஒரு புது மார்க்கத்தை யுண்டாக்கி இப்பொழுது இலக்ஷக்கணக்கான கிறிஸ்தவர்கள் அந்த மார்க்கத்திலாகி யிருக்கிறார்கள். தியோசோபி என்பதற்குப்பொருள், ஆண்டவனை யறிதல். ஆகிலும் இந்த மார்க்கத்தவர்களுக்கு குத்துபுமார்களில்லாததாலும் அப்பாதையைக்காட்டிக்கொடுக்க செய்குமார்களில்லாததாலும் சரீயத்தென்கிற அடித்தளமில்லாததாலும் தடுமாறித்திரிகிறார்கள். இன்னம் ஆயிரக்கணக்கான உபதேசிகள் ஐரோப்பாவிலிருந்து தொலையான தேசங்களுக்குப்போய்க் கிறிஸ்துமதத்தைப் பரப்பச் செய்துவருகிறார்கள். ஐரோப்பாவிலோ கல்வியிற் றேர்ச்சியடைய மனிதர்கள் வேதத்தைத்தள்ளி, பிரீதிங்கரென்று (Freethenker) எதீஸ்ற்றென்றும் (Alheist) அவிசுவாசிகளாகி வருகிறார்கள். இதற்கெல்லாம் காரணம், உங்களுக்கு ஞானமில்லாததே.

பிராமணக் குருமார்களே! உங்கள் ஞானத்திற்கும், எங்கள் ஞானத்திற்குமுள்ள வித்தியாசங்களை இப்பொழுது

பேசத்தேவையில்லை. ஆனால் உங்களை ஞானத்திலிருந்து சறுக்கச்செய்கிற அடித்தளமில்லாமல், உங்களில் சிலருக்கும் பெயர்களிலொருவர் உங்கள் ஞானவழியிலிருந்து [illegible] நடக்கிறார்களாயுங் காண்கிறோம். மார்க்கச்சட்டங்களயாதொன்றுமில்லாததால், கோவில்களில் விக்கிரகங்களை வைத்துக்கொண்டு ஆட்டங்களும், மேளங்களும், தாசிக்கூத்துகளுமாகிய வேடிக்கைகளை மார்க்கமாய்க் கொண்டாடி வருகிறார்கள். நமது இஸ்லாமார்க்கமோ சரீயத்தும், மஃரிபாவுஞ்சேர்ந்த நிரப்பமான வேதமாயும், ஆதானியுள்ள பேதை மனிதர்கள் முதல் குத்துபுமார்கள், நபிமார்கள் வரையும் அவரவர்கள் அக்கிலின் கதறுக்குத்தக்க இல்முகளும், அமல்களுமுடையனவாயும், ஈமானும் அமல்களும், பற்பல மறுத்துவங்களை யுடையனவாயும், அவரவர் தெண்டிப்புக்குத்தக்கதாய் மருந்துபாக்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாயும் எந்தசமானுக்கும் எந்தச் சங்கிக்கும் இணங்கினதாயு மிருப்பதால் நமது மார்க்கமே பரிபூரண ஞானத்தையுடைய அல்லாகுத்தாலாவால் அருளப்பட்ட வேதமென்றும், உங்களிருவர்களுடைய வேதங்களிற் குறைவுகளிருப்பதால் அவைகள், கடவுளால் வெளியாக்கப்பட்ட வேதங்களல்லவென்றும் அத்தாட்சிப்படுகின்றன.

குருமார்களே! நானிப்பொழுது உங்கள் மார்க்கங்களின் வணக்கங்களையும் எங்கள் மார்க்கத்தின் வணக்கங்களையு மொப்பிட்டு, எங்கள் வணக்கங்களின் மேன்மையைக் காட்டப்போகிறேன், எங்கள் சம்பாஷணையை, ஞானதீபப்பத்திரிகையில் அதின் அதிபர் வெளியாக்கிவருவதால் அதை வாசிக்கும் முஸ்லிம்களுக்குப் பிரயோசனமா யிருக்கும்பொருட்டு, கூடியமட்டில் தெளிவாய் விளக்கிக்காட்டப்போகிறேன். அவர்கள் கவனிக்கச் சில காரியங்களையுஞ் சொல்லுகிறேன்.

முதலாவது, நான் வணக்கங்களைக் குறித்துப் பேசும்பொழுது பாத்தினுடைய இல்மைப்பற்றியும் பேசுவேன். ஞானதீபப் பத்திரிகையில் வாசித்தவுடனே இரகசியமான இல்முகளைப் பரசியமாக்கிறோமென்று அப்பத்திராதிபருக்கு உக்கிரஞ்செய்ய முன்பாயாமல், அவைகளை விளக்கிக் காட்டும்வரையும் சபூருயிருப்பது நலமாயிருக்கும். பாத்தினுடைய இல்மில் வெளியாக்கக்கூடிய எல்லையைக் கடக்காமற் பேசுவேன். பாத்தினுடைய இல்முகளில் அக்கிலைக் கொண்டு விளங்கியட்டிப்படுத்திக்கொள்ளக் கூடியது மிருக்கின்றது விளங்கினாலும் சூரத்துப்படாதது மிருக்கின்றது. அக்கிலுக்குவிளங்காததும், சூரத்துப்படாததும், பேச்சைக்கொண்டுவிளக்கக்கூடாதது மிருக்கின்றது இவைகளைக்கூடியமட்டிலேபிரித்துதெளிவாக்கிக் காட்டுவேன். அப்பத்திரிகையை வாசிப்பவர்கள் இதை நன்றாய் விளங்கிமட்டிப்படுத்திக்கொண்டால், இந்த இல்முகளை யாராயும்பொழுது சறுகுதல் வராமலும், மயங்காமலும், அக்கிலைக் கொண்டு விளங்கக்கூடிய திந்தமட்டென்றும், கஷைபைக்கொண்டு அறியக்கூடிய திந்தமட்டென்றும், ஒருவிதமுமறியக்கூடாதது இன்னதென்றும் திட்டப்படுத்திக்கொள்ளலாம்.

இரண்டாவது, சரீயத்தென்றும், மஃரிபாவென்றும் சற்று முன் பிரித்து நான் பேசினது, வழக்கமாயப்படிப் பேசுவதனாலேயே. சரீயத்தென்று நான் சொன்னது, ளாகிறுக்கும் மஃரிபாவென்றது பாத்தினுக்குமாயிருக்கும். ஆனால் சரீயத்தாவது,—ளாகிறும் பாத்தினும் சேர்ந்ததாயிருக்கும். தரீக்கத்து மஃரிபாத்தாகியவைகளெல்லாம், சரீயத்தென்கிற சக்கரத்திற்குள்ளேயல்லாமல் புறத்திலல்ல. இமாம் கஸ்ஸாலி றகிமஹுல்லாகு சரீயத்தை இரண்டு வகையாய்ப் பிரித்துப் பேசியிருக்கிறார்கள் முதலாவது இல்முத்தவ்ஹீது. இரண்டா

வது அமலைச்சேர்ந்த இல்முகள். இது நாலுவகை. முதலாவது, தொழுகை நோம்பு முதலிய அமல்கள். இரண்டாவது, கொள்வினை விற்பினைபோலுள்ள வழக்கங்களுக்குரிய சட்டங்கள். மூன்றாவது, நிக்காஹு தலாக்கு போலுள்ள கருமங்களுக்குரிய சட்டங்கள். நாலாவது, நபுசின் தன்மையை யறிந்து அதைத் துப்பரவாக்கி, சற்குணம் கொள்ளுதற்குரிய சட்டங்கள். இந்த நாலு வகைகளுக்கும் ளாகிறுன இல்மென்றும், அமலுக்குரிய இல்மென்றும், தவ்ஹீதைச் சேர்ந்தவைகளுக்கு பாத்தினென்றும், இல்முல் முக்காசிபாவென்றுஞ் சொல்லப்படும், ஆகையால்சரீயத்து,மஃரிபாவைவிட்டும் பிரிந்ததல்ல. ளாகிறைகொண்டு கல்பிலுள்ள அசுத்தங்கள் போய், திரைகள் நீங்கப்பட்டு நபிசல்லல்லாகு அலைகிவஸல்லமவர்களுடைய நடக்கையாகிய தரீக்கத்தைப்பின்பற்றி அமல்செய்து வருகையில் வெளியாகிற உள்ளமைகளுக்கு ஹக்கீக்கத்தென்றும் யாவுக்கும உள்ளமை அல்லா ஒருவனேயல்லாமல் வேறில்லையென்று திட்டப்படுத்துகிறது தவ்ஹீதென்றும், அந்த அறிவுக்கு மஃரிபாவென்றுஞ் சொல்லப்படும்

மூன்முவது, அந்தப்பத்திரிகையை வாசிப்பவர்கள பலமுறையும் திருப்பித் திருப்பி வாசிக்கவேண்டியது. கூடுமானுல் நாலைந்து பெயர்களொன்முய்ச்சேர்ந்து வாசித்தாராய்ந்து வந்தால், இல்மு துலக்கமாகும், மனத்திற் சந்தேகங்களுற்பத்தியானுல் தெளிவையுடைய உலமாக்களிடமல்லது, செய்குமார்களிடம் கேட்டறிய வேண்டியது. அவர்கள தற்கங்கள சொன்னுல், அவர்களைக் கொண்டே அந்தப் பத்திராதிபருக்கு நேரே எழுதினால், அவர் துதிகூறி மறுமொழி எழுதுவார். பிழையென்பது அவருக்குத் திட்டப்பட்டால், பத்திரிகையிலே ஏற்று வெளியாக்குவார்.

குருமார்களே! ஆலம் அறிவோம், ஆலம் மிதால், ஆலம் அறுவாகு, ஆலம் லாகூத்து ஆகிய ஆலங்களையும், அவைகளொவ்வொன்றுடைய சிறப்புகளையும் அவைகளிலுள்ள படைப்புகளையும், அந்தப்படைப்புகள படைகப்பட்டிருப்பது இன்னதைக்கொண்டென்பதையும் அந்த ஆலங்களைக்கடந்தற்கு அந்த ஆலஙகளுக்குத் தக்கான அமல்களையும், அவைகளிலுள்ள சுகுறுக்களையும், ஆபத்துகளையும் வெவ்வேறுயப் பிரித்துப் பேசுவேன் இந்த ஆலங்களெங்கே யிருக்கின்றது, இவைகளுக்கும் நமக்குமிருக்கின்ற உடமைமென்னவென்று தங்களமனத்திலொரு கேள்வி உற்பத்தியாகும், அதை ஒரு உதாரணத்தைக் கொண்டு விளக்குகிறேன், இரண்டு நிலைக் கண்ணுடிகளை நேராய் எதிரே வைத்து நடுவே ஒரு மனிதனிருந்தால், அந்தக் கண்ணுடிகளுக்குள்ளே அதிசயிக்கத்தக்க காட்சிகள் காணக்கூடும், வாசிக்கிறவர்களொவ்வொருவம் நான் சொல்வதைச் சோதனை பண்ணிப்பார்த்தால், மிகவும் பிரயோசனத்தைக் கொடுக்கும். அந்த இரண்டு கண்ணுடிகளில் ஒரு கண்ணுடிக்கு அ வென்றும், மற்றக்கண்ணுடிக்கு ஆ. வென்றும், பெயர் கொடுப்போம். முதலாவது, அந்த அ. வென்ற கண்ணுடியில் அந்த மனிதனுடைய ரூபம் தெரியும், இதற்கு முதலாம் தட்டென்று சொல்வோம் இரண்டாவது, ஆ. என்கிற கண்ணுடியும் அதில் தெரிகிற அந்த மனிதனின் ரூபமுந் தெரியும், இதற்கு இரண்டாம் தட்டென்று சொல்வோம். மூன்முவது. அந்த உள்ளுக்குத் தொற்றுகிற கண்ணுடிக்குள்ளாற் பார்த்தால், இன்னமொரு தட்டுத்தெரியும் இவ்விதமே கணக்கிலகப்படாத தட்டுகள் தெரியும். ஆனுல் கண்பார்வைக்கு நாலைந்து தட்டுக்கதிகந் தெரியாது. இதை அப்பத்திரிகை வாசிக்கிறவர்கள் பார்த்துக்கொண்டால், ஆரிபீன்களின் மறுத்தபாக்களைப்பற்றிச் சொல்லுகிற விவரம், ஒரு மட்டுக்கு நிதானப்படும்

முன்னே நிற்கிற மனிதனின் வெளிரூபத்தை, வஹ்தத்துடைய மறுரூபமா அல்லது ஹகீகத்து முகம்மதிய்யாவென உவமையாய்ப் பேசலாம். இந்த உவமை சிப்பத்தின் வெளியாகுதலைக்காட்டவன்றி கண்ணாடியைக்குறித்தல்ல உள்ளே யிருக்கிற ரூஹு, அரூபியாய்க் காணக்கூடாததுமாய், அறியக் கூடாததுமாய்க் குறித்த சரீரமென்கிற சிப்பத்தைக்கொண்டு வெளியாகி யிருப்பதுமா யிருப்பதால். அந்த ரூஹுக்கு வுஜூதென்றும், முதலாவதாகக் கண்ணாடியிற் றோற்றுகிற ரூபத்துக்கு அயான் சாபிதாவென்றும். இரண்டாம் தட்டு, ஆலம் அறுவாவென்றும், மூன்றாம் தட்டு ஆலமிதாலென்றும் நாலாம் தட்டு, ஆலம் அஜ்சாமென்றும் உவமையாய்ப் பேசலாம். கண்ணாடியில் தோற்றிய ஒவ்வொரு தட்டும் மற்றதுக்கு நிழலாயிருப்பதுபோல், வுஜூதுக்கு வாஹிதிய்யத்து நிழலாகவும், ஆலம் அறுவாகு வாஹிதிய்யத்தின் நிழலாகவும் ஆலமிதால் அறுவாஹின் நிழலாகவும், ஆலம் அஜ்சாம் ஆலம் மிதாலின் நிழலாகவுமிருக்கும். இதை இப்பத்திரிகை வாசிக்கிறவர்கள் நன்றாய் வாசித்தும், அறிந்தவர்களிடங் கேட்டும் விளங்கித் திட்டப்படுத்திக் கொள்ள வேண்டும். பாத்திஹுடைய இல்முக்கு அடித்தளமானபடியால். நான் பின்னாற் சொல்லப்போகிற விவரங்களை யறிவதற்கு இதை நன்றாய் விளங்கிக் கொள்ளுதல் அவசியமா யிருக்கும் ஆனால் ஒரு உதாரணத்தைச் சொன்னால் சகல விஷயங்களிலும் அந்தவிதந்தானென்று நினைத்துவிடப்படாது. நான் சொல்லிய உதாரணத்தைக் கொண்டு ரூபிக்க நாடுகிற காரியம் ஒன்றையே கவனிக்கவேண்டும். ஒரு மனிதனைச் சிங்கத்துக்கு ஒப்பிடுவது வீரியத்தைக் குறித்தே மற்ற விஷயங்களில் மனிதனுக்குஞ் சிங்கத்துக்கும் ஒற்றுமை யிராது.

நான் மேலே சொல்லிய உதாரணத்தைக்கொண்டு விளங்கக் கொடுக்கிறதாவது:—முன் சொல்லிய ஆலம்கள் சகலதும் அல்லாகுத்தாலாவுடைய வுஜூதின் நிழலல்லாமல், அந்த ஆலங்களுக்கு அல்லது அந்த ஆலங்களிலுள்ள படைப்புகளுக்கு வுஜூதில்லை யென்பதையும் அந்த மனிதன் கண்ணாடியை விட்டு நீங்கினால், அந்த தோற்றங்களெல்லாம் அற்றுப்போகு மென்பதையுமே இதை நன்றாய விளங்கி நமக்கு ஒரு உள்ளமையுமில்லை, ஒரு தத்துவமுமில்லை சியலுமில்லை, பார்வையுமில்லை, கேள்வியுமில்லை, நாட்டமுமில்லை அல்லாவுத்தாலாவைக்கொண்டே என்று திட்டமாக்குவதுதான் தவ்ஹீது.

நாம் சொல்லிய ஆலம்களெல்லாம் மனிதனிற் கொழுகியிருக்கும் விதத்தை விளக்குதற்காக ஒரு உதாரணஞ் சொல்லுகிறேன் தவ்விகுருப் யந்திரப் பெட்டியை மனிதனின் சரீரம்போலும், அந்தப்பெட்டிக்குளிருக்கிற யந்திரம் கல்புபோலும், அந்த யந்திரத்தில் ஐந்து தமருகள் வைத்து ஐந்து ஊர்களுக்குப்போகிற தந்திகளைப் பொருத்தியிருப்பதுபோலும் அஜ்சாமென்கிறஆலத்துக்கு பஞ்சேந்திரியம் என்கிற தந்தியும் மிதாலென்கிற ஆலத்துக்கு பிக்று அல்லது எண்ணமென்கிறதந்தியும், அர்வாகு என்கிற ஆலத்துக்கு இல்மென்கிற தந்தியும், லாகூத்தென்கிறஆலத்துக்கு சிர்றென்கிற தந்தியையுஞ் சேர்ததுப்பூட்டப்பட்டதுபோலுமாயிருக்கும். குறித்த யந்திரத்தை நடத்துவதுமின்சாரதத்துவத்தைக் கொண்டே. கல்பை நடத்துவது அல்லாவுத்தாலாவின் வுஜூதின் தத்துவத்தைக்கொண்டே குறித்த யந்திரத்தில் ஒரு ஊருக்கு வைத்

இருக்கிற தந்தி வழியாய்ப் பேசும்போது, மற்ற ஊர்களுக்கு வைத்திருக்கிற தந்திகளின் வாசல்கள் அடைக்கப்பட்டிருக்கும். இதுபோலவே அஜிசாமுடைய ஆலத்தில் பஞ்சேந்திரியம் என்கிற வாசலைத் திறந்து அந்த ஆலத்தின் சமாசாரங்களிலும், பராக்குகளிலுமிருக்கும் வரையும் மற்ற ஆலம்களின் வாசல்கள் திறக்கப்படமாட்டா. அந்த ஆலங்களின் வாசல்கள் திறக்கவேண்டுமானால், அந்த வாசலையடைத்து அதற்கும் அதற்குயரவிருக்கிற வாசலுக்குமிடையே தடையாயிருக்கிற அசுத்தங்களையெல்லாங் கழுகித் துப்பரவுசெய்தபின் உயரவிருக்கின்ற வாசலைத்திறக்கவேண்டும். அந்த அசுத்தங்களைக் கழுகிறது, ஸாலிஹான அமலென்னுந் தண்ணீரைக்கொண்டே.

இந்த ஆலங்களின் விவரங்களைப்பிரித்துப்பேசுமுன் அல்லாகுத்தாலா வத்தீனி என்கிற சூரத்தில் மனிதனை உயர்த்தியான தன்மையாய்ப் படைத்தோம் பின்பு கீழ்மையிலுங் கீழ்மையானவர்களாக்கினோமென்று சொன்னதின் கருத்தை விளக்கப்போகிறோம்.

முதலாவது, மனிதனுடைய சரீரம் நாலு பூதங்கள், அல்லது அனாசிர்களைக் கொண்டு படைக்கப்பட்டிருக்கின்றது அந்த நாலு அனாசிர்களுமாவது:—மண் தண்ணீர், காற்று, நெருப்பு இந்த நாலு அனாசிர்களுக்கும் அஸிலாவது.—அணுவாயிருக்கும் இந்த அணு என்பது இன்னதென்பதைக்குறுண்ணன்மைக்கு மறுமொழிசொல்லும்போது சொல்வோம். துன்யாவிலுள்ள உயிர்ப்பிராணிகள், மரம் மட்டை, கற்கரடு சகலதும் மனிதனைப்போலவே நாலு அனாசிர்களைக் கொண்டு படைக்கப்பட்டிருப்பதால் இவ்விஷயத்தில் மனிதன், மிருகம், மரம் மட்டை, கற்கரடு எல்லாம் ஒன்றாயிருக்கும். ரூஹ் நபாதீ அல்லது இயற்கையின தத்துவம் மனிதனுக்குப் போலவே மற்றும் உயிர்ப்பிராணிகளுக்கும் மரங்களுக்குமிருப்பதால் அவைகளும் மனிதனும் இவ்விஷயத்தில் ஒன்றாயிருக்கும். இயற்கைத் தத்துவம் வளர்ச்சியையுண்டாக்கிறது மலம் ஜலத்தை வெளியாக்கிறது சரீரத்தை வளர்க்கிறது பசிக்கச்செய்கிறது இவைபோன்ற தத்துவங்கள் இந்த மனிதனுக்கு ரூஹுல் ஹைவானியுமிருக்கிறது இச்சை கோபம் முதலிய குணம் இதிலிருந்து இந்த ரூஹை ஹைவானி இருதயத்தின் இடது புப்பிலிருந்து எரிகிற விளக்கைப்போலாயிருக்கும் ஸப்பாத்தென்பது அந்த விளக்கின் ஒளியின் பிரகாசத்திரத்தைத் அதற்கு எண்ணெய் பார்வை, கேள்வி முதலிய இந்திரியங்கள் அதின் ஒளிவு, இச்சை ஆசை அதின் சூடு. கோபம் அதின் புகை இந்த ரூஹ் மனிதனுக்கிருப்பதுபோலவே மற்றும் உயிர்ப்பிராணிகளுக்குமிருப்பதால் மனிதனும் மிருகங்கள் முதலிய உயிர்ப்பிராணிகளும் இவ்விஷயத்தில் ஒன்றாயிருக்கும்.

ஆனால் அல்லாகுத்தாலா மனிதனுக்கு மற்றும் துன்யாவிலுள்ள படைப்புகளொன்றுக்குங் கொடாததொன்றான நாதிக்காவென்கிற ரூஹைக்கொடுத்திருக்கிறான் இந்த ரூஹுக்குத்தான் அல்லாகுத்தாலா குர்ஆனில் நபுசுல் முத்மயின்னாவென்றும் என்னுடைய கருமத்திலுள்ளதென்றும் சொல்லியிருக்கிறது இந்த ரூஹு சரீரத்தை அல்லது ரூஹுஹைவானியைச் சேராமலும் பிரியாமலும் பொருந்து நிற்கும் யோசித்தல் பிரித்தறி

சுல் பாடம் பண்ணுதல் ஞாபகத்தில் வைத்தல் இல்முகளைத்தேடல் ஆகியகுணங்களையுடையது இந்த ரூகுக்குச் சிறகுகளில் ஒல்லென்றுஞ் சொல்லப்படும் இதுதான் உள்ளமையில் இன்சானாயிருக்கும் இதற்குத்தீனும் தேட்டமும் இல்மாயிருக்கும் இதைக்குறித்துத்தான் செய்யிதினாமுஹியித்தீன் அப்துல் காதிறு ஜீலானி கத்தஸல்லாகு சிர்றகுல் அஸீஸ் அவர்கள் அல்லாகுத்தாலாவிடம் நாயனே உனக்கொரு தலமுண்டாவென்றுகேட்க நான் தலங்களெல்லாவற்றையு முண்டாக்கினவன் நான் தலங்களுக்கெல்லாம் தலமாயிருக்கிறேன் எனக்குத்தலம்வேறில்லை மனிதனுடைய கல்பிலிருக்கிற சிர்றிலல்லாமலென்றும் இன்சானாகிறவன் என்னுடைய சிர்றாயிருக்கும் நான் அவனுடைய சிர்றாயிருக்கும் இன்சானுடைய சிர்றாகிறது என்னுடைய சிர்றில் நின்றுமாயிருக்கும் இன்னம் இன்சானை என்னுடைய ஏறுவாகனமாக்கிக் கொண்டேன் மற்றும் படைப்புகளெல்லாவற்றையும் இன்சானுக்கு வாகனமாக்கினேன் மனிதனை என்னொளிவால் படைத்தேன் மலாயிக்கத்துகளை மனிதனுடைய ஒளிவில் நின்றும் படைத்தேன் என்றும் மனிதன் அவன் என்னிடத்தேயிருக்கின்ற தன்மையையறிவானேயானால் ஒவ்வொரு மூச்சிலும் அவன் தன்னைக் குறித்து நான் இராஜர்களுக் கெல்லாம் ராஜன் இந்த இராஜாங்கம் எனக்கேயல்லாது வேறொருவருக்கு மில்லையென்று சொல்வானென்று திருவுளம்பற்றினான் இப்படிப்பட்ட உயர்த்தியான ரூகைக் குறித்து நான் மனிதனை உயர்த்தியான தன்மையாய்ப்படைத்தோமென்று குறுவானில் அல்லாகுத்தாலாசொல்லியிருக்கின்றது இப்படிப்பட்ட மேன்மையான ரூகு சரீரத்தோடு சேர்ந்தவுடனே நபீசத்தின்குணமும் பூதங்களின்குணமுமேலிட்டு அந்த மேன்மையான ரூகின்குணம் பிரகாசிக்காமல் மங்கச்செய்து பற்பலமிருகங்கள் சீவசெந்துகள் அசுரர்கள் முதலியவைகளின் தீயகுணங்களையும் கொண்டதால்தான் அல்லாகுத்தாலா பின்பு கீழ்மையிலும் கீழ்மையானவர்களாக்கினோமென்று சொன்னது.

இந்தத் நபீசத்துடைய கெட்டகுணங்கள் மேலிட்டிருக்கும் தன்மைக்கு நரகமென்று சூபிகள் சொல்லுகிறார்கள். இது நரகமென்பதற்குள்ள அத்தாட்சிகளைப் பின்னால் சொல்வேன் இந்த நபீசத்தென்கிற நரகத்தில் விழுந்து மிருகங்களின் குணங்களுக்குக் கீழ்ப்பட்டு, மிருகங்களாயிருப்பவர்களை வெளியெடுக்கத்தக்க வணக்கங்கள் உங்களிடமிருக்கின்றனவென்று நினைக்கிறீர்களா? கிறிஸ்தவர்கள் கிழமைக்கொருமுறையல்லது இரண்டு முறைகோவிலுக்குப்போய் ஆசனத்தில் பெண்களும் ஆண்களுமாகவிருந்து போதகரின் பிரசங்கத்தை கேட்டுவிட்டு வீட்டுக்குவரும் வணக்கத்தினால் இந்த நரகத்தைவிட்டும் வெளிவரவும் மிருகங்களின் குணங்களை விட்டும் நீங்கவும் கூடுமென்று நினைக்கிறீர்களா? பிராமணக்குருக்களே! நீங்கள் உங்கள் சரீரத்திற் சாம்பரைப்பூசியும் விக்கிரகங்களுக்கு நமஸ்காரஞ் செய்தும் தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு முதலியவைகளைவைத்துப் பூசைபண்ணியும் நீங்கள் உங்கள் மனத்திருள் நீங்கிப் பரமகதியடைய நினைத்திருக்கிறீர்களா? வாருங்கள் ஒரு பள்ளிவாசல் சமீபத்துக்குப்போவோம் அங்கு நடக்கிற வணக்கங்களையுங் காட்டுகிறேன் அவைகளின் பொருள்களையும் விளக்குகிறேன் அதன்பிறகு ஆருடைய வணக்கம் நபுசைத் தூய்மையாக்கத்தக்க வணக்கமென்று நீங்களே சொல்லுங்கள்.